## பெரியார் – அண்ணா – கலைஞர் – நம் முதலமைச்சர் வழியில் கழக மருத்துவ அணி,

# சமூகப் பிணி தீர்க்கும் மருத்துவர்களாகவும் சமூகப் பணியாற்றுகிறது!

### புதுக்கோட்டையில் தி.மு.க மருத்துவ அணி நடத்திய சமூகநீதி – பகுத்தறிவு – மாநில சுயாட்சி பொதுக்கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

புதுக்கோட்டை,மே.27-

**புதுக்கோட்டையில் தி.மு.கழக மருத்துவர் அணி நடத்திய சமூகநீதி - பகுத்தறிவு - மாநில சுயாட்சி பொதுக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், கழக மருத்துவ அணி, நோய் தீர்க்கும் மருத்துவர்களாகவும், பெரியார் - அண்ணா - கலைஞர் - நம் முதலமைச்சர் அவர்கள் வழியில், சமூகத்தில் பீடித்துள்ள பிணி தீர்க்கும் மருத்துவர்களாகவும் களப்பணியாற்றுகிறது" என்று குறிப்பிட்டு பாராட்டிப் பேசினார்.**

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

நம் கழக மருத்துவ அணியின் சார்பாக, மிக பிரமாண்டமாக, எழுச்சியுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமூகநீதி, பகுத்தறிவு மற்றும் மாநில சுயாட்சிப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று, உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த நிகழ்வில் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இருந்து கழகத்தைச் சேர்ந்த 2 ஆயிரம் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத் துறையைச் சேர்ந்த சகோதரர்கள், சகோதரிகள் பங்கேற்பார்கள் என்று, மருத்துவர் எழிலன் அவர்கள் என்னிடம் தேதி கேட்கும்போது சொன்னார். ஆனால், இங்கு வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது இவ்வளவு பெரிய பொதுக்கூட்டத்தை, இங்கு அவர் கூட்டி இருக்கிறார்.

இன்னும் சொல்லப்போனால், பொதுக்கூட்டம் என்று சொல்லிவிட்டு, மருத்துவ அணியின் மாநாட்டையே இங்கு அவர் நடத்திக் காட்டி இருக்கிறார். மருத்துவ அணிக்கு, இளைஞர் அணியின் சார்பாக என் வாழ்த்துகள்.

### முதல் பெண் மருத்துவர்

புதுக்கோட்டை என்றைக்குமே `கழகத்தின் கோட்டை' என்று சொல்கிற வகையில், மிகுந்த எழுச்சியுடன், சிறப்பாக இந்த நிகழ்ச்சி நடந்துகொண்டு இருக்கிறது. முதல் பெண் மருத்துவரான முத்துலட்சுமி ரெட்டி அவர்களைத் தந்த மண், இந்த புதுக்கோட்டை மண் என்பது, இந்த புதுக்கோட்டையின் சிறப்பு. அப்படிப்பட்ட சிறப்புக்குரிய புதுக்கோட்டை மண்ணில் உங்களை எல்லாம் சந்திப்பதில் எனக்கு கூடுதல் பெருமை.

சமீபத்தில், கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தலைவரின் அறிவுறுத்தலின் பேரில், தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணியின் சார்பாக ஒரு மாபெரும் பேச்சுப் போட்டியை நடத்தினோம். அந்தப் பேச்சுப் போட்டியின் மூலமாக 183 இளம் பேச்சாளர்களைத் தலைமைக்குக் கொடுத்தோம். அப்படி கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியில் தேர்வான தம்பி சஞ்சய், தங்கை ப்ரீத்தி இங்கு பேசினார்கள். இளைஞர் அணி தேர்தெடுத்த, அவர்களுக்கு வாய்ப்பு அளித்த மருத்துவ அணிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மிகப்பெரிய வித்தியாசம்

நாட்டிலே எவ்வளவோ மருத்துவர்கள், மருத்துவத் துறைப் பணியாளர்கள் இருக்கலாம். ஆனால், அவர்களுக்கும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக மருத்துவ அணியில் இருப்பவர்களுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. மற்ற மருத்துவர்களும், மருத்துவ பணியாளர்களும் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற நோய்களை மட்டும்தான் சரிசெய்வார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மருத்துவ அணியில் இருக்கின்ற மருத்துவர்கள், மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை மட்டுமல்ல, இந்த சமுதாயத்தில் ஏற்படுகின்ற நோய்களையும் தீர்த்து வைக்கின்ற ஆற்றலையும், திறமையையும் பெற்றவர்கள், நம் மருத்துவ அணியின் நிர்வாகிகள்.

சமுதாயம் நோய்வாய்ப்பட்டு இருக்கிறது. அதற்கு சிகிச்சை தேவை என்று சொன்னால், பலரும் நம்பாத ஒரு சூழல் ஒரு காலத்தில் இருந்தது. நம்பவில்லை என்றால்கூட பரவாயில்லை. சிகிச்சை அளிக்க வருபவர்களையும் எதிர்த்தார்கள். ஆனாலும், பின் வாங்காமல் இந்த சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற நோய்களை சரிசெய்வதற்காகப் புறப்பட்டவர்கள்தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும்.

இந்த சமுதாயப் பணியைச் செய்ய ஆரம்பித்த காலகட்டத்தில் பொதுமக்களிடமே வரவேற்பு கிடையாது. கல்லால் அடித்தார்கள், தக்காளி,முட்டை ஆகிய பொருட்களை எடுத்து வீசினார்கள், தடிகளால் தாக்கினார்கள். இங்கு சிவகங்கையில் இருந்து நிறையபேர் வருகை தந்துள்ளீர்கள்.

### இதுதான் பெரிய வரவேற்பு

ஒருமுறை தந்தை பெரியார் அவர்கள், ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காக சிவகங்கைக்குச் சென்று கொண்டு இருந்தார். அப்போது, அந்தக் காலத்து சங்கிகள் பழைய செருப்புகளை வைத்து, ஒரு தோரணமாகக் கட்டி, பெரியாருக்கு வரவேற்பு கொடுப்பதற்காக செய்தார்கள். அதைப் பார்த்த பெரியாரின் தொண்டர்கள், அந்த செருப்பு மலையை அறுத்து கீழே போடுவதற்கு முயற்சி செய்தார்கள். ஆனால், பெரியார் அவர்களை எல்லாம் தடுத்தார். தடுத்துவிட்டு, பொதுவாக யாரையாவது வரவேற்க வேண்டும் என்றால், மா இலைகளைத் தோரணமாகக் கட்டித் தொங்கவிடுவார்கள். மா இலை அனைத்து இடங்களிலும் சுலபமாகக் கிடைக்கும். ஆனால், இங்கு இவர்கள் என்னை வித்தியாசமாக வரவேற்க வேண்டும் என்று பழைய செருப்புகளை மாலையாக செய்து, தோரணமாகக் கட்டி இருக்கிறார்கள். ஆகவே, இதைத்தான் நான் பெரிய வரவேற்பாக பார்க்கிறேன் என்றுச் சொன்னவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

### இறந்த பிறகும் போராட்டம்

அதேபோல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுயமரியாதை கொள்கைகளை பிரச்சாரம் செய்ததால், ஒரு முறை புதுச்சேரியில் கலைஞர் அவர்களே தாக்கப்பட்டார். தந்தை பெரியார்தான் கலைஞரை மீட்டு, மருந்திட்டு ஈரோட்டிற்கு அழைத்துச் சென்றார். கலைஞர் அவர்கள் மீது ஒரு சில கும்பல் ஏச்சுகளையும், பேச்சுகளையும் தொடர்ந்து வீசிகொண்டே இருந்தன. சாகும் வரை போராட்டத்தைச் சந்தித்தார். தான் இறந்த பிறகும் போராட்டம் நடத்தி, அதிலும் வெற்றி பெற்றவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதை நீங்கள் உணர வேண்டும்.

கலைஞர் சொன்னார். ``நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள். அதையெல்லாம் உரமாக்கிக் கொண்டு வளர்வேன். என்றென்றும், மக்கள் உங்களுக்காக உழைப்பேன்" என்று சொன்னவர்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

இன்றைக்கு நம் தலைவர் அவர்கள், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் வழியில், தன் செயல்பாடுகளின் மூலமாக தமிழ்நாட்டை உயர்த்தி பிடித்துக்கொண்டு இருக்கிறார். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் சமூகநீதி மற்றும் பகுத்தறிவு மருத்துவஅணி ஏராளமான நிகழ்ச்சிகளை, நீங்கள் நடத்தி இருக்கிறீர்கள்.

### இன்றுதான் தொடக்கம்

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, ஒரு ஆங்கில கருத்தரங்கம், பேரிடர் நேர மருத்துவ உதவி நிகழ்ச்சிகள், தமிழ்நாட்டின் 6 மண்டலங்களில் சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் பாசறைக் கூட்டங்கள் என நிறைய நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியுள்ளீர்கள். அதற்கு எனது வாழ்த்துகள்.

முதல் பாசறைக் கூட்டத்தை தஞ்சையில் நடத்துனீர்கள். இன்றைக்கு நிகழ்ச்சியின் இறுதிக்கூட்டத்தை புதுக்கோட்டையில் நிறைவு செய்துள்ளீர்கள். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், நீங்கள் நிறைவு செய்துள்ளீர்கள் என்று சொல்ல மாட்டேன். இன்றைக்குத்தான் ஆரம்பித்து இருக்கிறீர்கள்.



இன்று பேசிய கருத்துகள் எல்லாம் இந்த மேடையுடன் நின்றுவிடக்கூடாது. இங்கு பேசப்பட்ட கருத்துகள் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள ஒவ்வொருவரின் காதுகளுக்கும் சென்று சேர வேண்டும்.

பொதுவாக, விளையாட்டு மேம்பாட்டு அணியைப் `பணக்கார அணி' என்று சொல்ல மாட்டேன். மிகவும் வசதியான அணி என்று வேண்டுமானால் விளையாட்டு அணியைச் சொல்வேன். ஆனால், விளையாட்டு மேம்பாட்டு அணிக்கு சற்றும் குறைவில்லாத, இன்னொரு வசதியான அணி என்றால், அது மருத்துவர் அணிதான். அதை ஏன் சொல்கிறேன் என்று உங்கள் அத்தனைப் பேருக்கும் தெரியும்.

அந்த அணியில்தான் கம்பன் இருக்கிறார். அண்ணாமலை ரகுபதி இருக்கிறார். திலீப்குமார் இருக்கிறார். இவர்கள் எல்லாம் அணிக்காக எதையும் செய்கின்ற நிர்வாகிகள். இன்னொரு விஷயத்திற்காகவும் இந்த அணியைப் பாராட்ட வேண்டும். இந்த நிகழ்ச்சிக்கு `பகுத்தறிவு', `சமூகநீதி' மற்றும் `மாநில சுயாட்சி' என பொதுக்கூட்டங்களுக்கு என்று பெயர் வைத்து இருக்கிறீர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்த மூன்றும்தான் நம் திராவிட இயக்கம். பகுத்தறிவு, சமூகநீதி, மாநில சுயாட்சி.

ஒரு காலத்தில் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்றால், விண்ணப்பிக்க வேண்டும் என்றாலே, அதற்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தது. அந்த நிலையை ஒழித்துக் கட்டியது யார் என்று பார்த்தீர்கள் என்றால், நீதிக் கட்சியின் முதலமைச்சராக இருந்த பனகல் அரசர் அவர்கள். இன்றைக்கு, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து மருத்துவர்கள் எல்லாம் வருகிறார்கள் என்றால், அதற்கு காரணம் `நீதி' கட்சிதான். ஆனால், இன்றைக்கும் நம் வீட்டுப் பிள்ளைகள் மருத்துவர்கள் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நீட் தேர்வை ஒன்றிய பா.ஜ.க அரசு கொண்டு வந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். நம் தமிழ்நாட்டு மாணவி, பெயர் நிலா பாரதி. சில ஆண்டுகளுக்கு முன்பு நீட் தேர்வு எழுதி மருத்துவர் ஆகின்ற வாய்ப்பை அவர் இழந்தார். ஆனால், அதே மாணவி நிலா பாரதி, இன்றைக்கு யு.பி.எஸ்.சி தேர்வு எழுதி மாநிலத்திலேயே முதல் இடம் பிடித்து ஐ.எப்.எஸ், இண்டியன் பாரஸ்ட் சர்வீஸ் அதிகாரியாக வெற்றி பெற்றுள்ளார். இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு யு.பி.எஸ்.சி தேர்வில் வெற்றி பெற முடிந்த நம் வீட்டு பிள்ளையால், ஏன் நீட் தேர்வில் வெற்றிப்பெற முடியவில்லை. ஏனென்றால், நீட் என்பது ஒரு தேர்வு கிடையாது. அது ஒரு சூழ்ச்சி என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நீட் தேர்வு மாதிரிதான், மும்மொழிக் கொள்கையைக் கொண்டு வந்து இந்தியைத் திணிக்க முயற்சிக்கிறார்கள். புதியக் கல்விக்கொள்கையைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள். 3-ஆம் வகுப்பு, 5-ஆம் வகுப்பு, 8-ஆம் வகுப்புக்கு பொதுத்தேர்வு கொண்டுவர வேண்டும் என்று சொல்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் மாநிலத்திற்குத் தர வேண்டிய 2 ஆயிரத்து 500 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தரும் என்று சொல்கிறார்கள். நம் முதலமைச்சர் சொல்லிவிட்டார். 2 ஆயிரத்து 500 கோடி இல்லை, நீ 10 ஆயிரம் கோடி கொடுத்தால்கூட, உன் புதியக் கல்விக்கொள்கையை தமிழ்நாட்டு மாணவர்களிடம் திணிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

புதியக் கல்விக்கொள்கையில்தான், `குலத்தொழில் செய்வதற்கு பணம் தருகிறேன். குலத்தொழிலைப் படி பணம் தருகிறேன்' என்று விஷ்வகர்மா திட்டத்தை ஒன்றிய அரசு கொண்டு வருகிறார்கள். நம் திராவிட மாடல் அரசு எப்படியெல்லாம் படிக்க வைக்க முடியும் என்ற திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

மாணவர்களுக்கு காலை உணவு திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரைப் படிக்கின்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளிக்கு வந்தால் அவர்களுக்கு காலையில் தரமான காலை உணவு. படித்துவிட்டு, அவர்கள் அடுத்து கல்லூரியில் என்ன துறையைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொல்வதற்கு நான் முதல்வன் என்ற திட்டம்.

பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டும், படிக்க வேண்டும். பள்ளிக்கூடம் சென்றால், மட்டும் பத்தாது அவர்கள் கல்லூரி சென்று படிக்க வேண்டும் என்று, அரசு பள்ளியில் படித்துவிட்டு, எந்தக் கல்லூரிக்குச் சென்று படித்தாலும் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக கொடுக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். ஆண்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்று கொண்டு வந்திருப்பது, தமிழ்புதல்வன் திட்டம்.

### 8 தொகுதிகள் குறையும்

நாம் மாணவர்களை படிக்க வைப்பதற்காக, ஒவ்வொரு திட்டத்தையும் தீட்டுகிறோம். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசோ மாணவர்களை கல்வியிலிருந்து எப்படியெல்லாம் வெளியேற்றலாம் என்று முயற்சிச் செய்துகொண்டு இருக்கிறார்கள். அதேபோல், இன்னொன்று தொகுதி மறுவரையறை என்ற ஒன்றைக் கொண்டு வருகிறார்கள். மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறையைக் கொண்டு வந்தார்கள் என்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற 39 நாடாளுமன்ற தொகுதிகளில் 8 தொகுதிகள் குறைக்கப்பட்டு, 31 தொகுதிகளாக மாறும்.

இதற்காக, இந்தியாவிலேயே முதன்முறையாக தொகுதி மறுவரையறையைக் கண்டித்து, எதிர்த்து குரல் கொடுத்த ஒரே முதலமைச்சர், முதல் முதலமைச்சர் நம் முதலமைச்சர் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

மாநிலங்களின் உரிமைகளை எல்லாம் எப்படி ஒழித்துக்கட்ட வேண்டும் என்று யோசிப்பதுதான் ஒன்றிய பா.ஜ.க அரசு. அதிகாரங்களை மாநிலங்களுக்கு பரவலாக்க வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்த இரண்டு கொள்கைகளுக்கு நடுவேதான், இப்போது ஒரு போட்டி நடந்து கொண்டு இருக்கிறது.

நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக மட்டும் தொடர்ந்து போராடவில்லை. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுப்பவர்தான் நம் முதலமைச்சர் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த மாதம் ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு, இந்திய ஜனநாயக வரலாற்றிலேயே ஒரு மிகச்சிறந்த தீர்ப்பு. மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படு கின்ற மசோதாக்களுக்கு ஒப்புதல் தர வேண்டும். குடியரசு தலைவருக்கும், ஆளுநருக்கும் கால அவகாசத்தை நிர்ணயித்தது உச்சநீதிமன்றம்.

இதன் மூலம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநில சட்டமன்றங்களின் உரிமைகளையும் நம் முதலமைச்சர் அவர்கள் பாதுகாத்துக் கொடுத்து இருக்கிறார். இந்தியாவில் உச்சநீதிமன்றம் பெரிதா, நாடாளுமன்றம் பெரிதா என்பதைவிட, நாம் ஒன்றை உணர வேண்டும். எது பெரியது என்றால், எல்லாவற்றிற்கும் மேலாக மக்கள் மன்றம்தான் பெரியது என்பதை நம் முதலமைச்சர் அவர்கள் அறிந்து வைத்து இருக்கிறார்.

இதனை திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் நம்பிக்கொண்டு இருக்கிறது. உறுதியாக என்றென்றும் நம்பும். எனவேதான், மாநில உரிமைகளை காக்க நம் தலைவர் அவர்கள் எந்த எல்லைக்கும் சென்று போராடுவார்.

### இரண்டு தீர்வுகள்

நோயைத் தடுக்க இரண்டு தீர்வுகள் உண்டு. ஒன்று வரும் முன் காப்பது. இன்னொன்று நோய் வந்தபிறகு அதற்கான சிகிச்சையை அளிப்பது. பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முன்பே நம் முதலமைச்சர் அவர்கள், அந்தப் பிரச்சினைகளைத் தடுக்கிறார். அதனால்தான் நம் முதலமைச்சரைப் பார்த்தால் சங்கி கூட்டங்களுக்கு எப்போது வயிற்று எரிச்சல் கோபம் வரும்.

நமக்கு பல்வேறு வழிகளில், ஒன்றிய பா.ஜ.க அரசு தொல்லைக் கொடுத்து வருகிறது. உங்களுக்குத் தெரியும். இன்னும் 8 மாதங்களில் சட்டமன்ற தேர்தல் வர இருக்கிறது.

இன்றைக்கு மீண்டும் அடிமைகள், பழைய ஓனர்களைத் தேடிப் பிடித்து கூட்டணி அமைத்து இருக்கிறார்கள். எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நான்கு மாதங்களுக்கு முன்பு சொன்னார். 2025-ல் இல்லை 2031-ல் கூட பா.ஜ.க-வோடு, அ.தி.மு.க கூட்டணி வைக்காது என்றுச் சொன்னவர்தான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். அன்றைக்கு இவ்வளவு வீரவசனம் பேசிவிட்டு, இன்றைக்கு அவர்களின் காலிலேயே சென்று விழுந்து இருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்டவர்கள் கைக்கு தமிழ்நாடு மீண்டும் போனால் என்ன ஆகும்.

கடந்த 10 வருட அ.தி.மு.க ஆட்சியில் நம் மாநில உரிமைகள் அத்தனையும் அடகு வைத்தது அ.தி.மு.க. மீண்டும் அவர்களுக்கு அந்த வாய்ப்பை கொடுத்தீர்கள் என்றால், எப்படி அ.தி.மு.க-வை அடகு வைத்தார்களோ, அதேபோல் தமிழ்நாட்டையும் பா.ஜ.க-வுக்கு அடகு வைத்து விடுவார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

ஆகவே, தமிழ்நாட்டைக் காக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது என்றாலும், மருத்துவர்களுக்கு அந்தப் பொறுப்பு இன்னும் கூடுதலாக இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு அரசியலிலும், சமுதாயத்திலும் நோய் பரப்பும் கிருமிகளாக சங்கிகள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள்.

பா.ஜ.க-வின் அணிகளான ஐ.டி, ஈ.டி இதுவெல்லாம் பா.ஜ.க-வின் அணிகள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு தேர்தல் வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். எனவே, கழகத்தின் அணிகளான நம் மருத்துவர் அணி, இளைஞர் அணி, மாணவர் அணி எல்லாம் இன்றிலிருந்து தேர்தல் வேலையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும்.

### மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு

நம்மிடம் வலுவான ஒரு கொள்கை இருக்கிறது. கழக அரசின், முதலமைச்சரின் சாதனைகள் பட்டியலாக இருக்கின்றன. நீங்கள் எல்லாம் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் தினசரி நீங்கள் நூற்றுக்கணக்கான மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. அவர்களிடம் கழகத்தின் சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள்.

டாக்டர் சொன்னால் நிச்சயமாக நம் மக்கள் நம்புவார்கள். உங்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அதிலும் தி.மு.க-வில் இருப்பவர்கள் நீங்கள் எல்லாம் வெறும் `மெடிக்கல் டாக்டர்ஸ்' கிடையாது. நீங்கள் ஒவ்வொருவரும் `சோசியல் டாக்டர்ஸ்' என்ற பெருமை உண்டு.

அடுத்த 7, 8 மாதங்கள் நாம் அயராது உழைக்க வேண்டும். 2026-ல் நம் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார் வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று. அதை நிரூபித்து காட்டுவோம். நம் இலக்கு தலைவர் சொன்னதைப்போல் 200 பத்தாது. 234 தொகுதியும் நம் இலக்காக இருக்க வேண்டும். அதற்கு உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பும், முயற்சியும் அவசியம்.

அடுத்த ஒரு வருடத்திற்கு தேர்தல் மட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். கழகம் 7-வது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். அந்த வரலாற்றை படைக்க வேண்டும். நம் கழகத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராகத் தேர்தெடுக்கப்பட வேண்டும் என்றால், இங்கு வந்து இருக்கின்ற மருத்துவ அணியைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகள் உங்களிடம் கேட்டுக்கொள்வது ஆட்சியின் சாதனைகளை, அடுத்த 8 மாதங்களுக்கு தொடர்ந்து கொண்டுபோய் சேருங்கள். உங்களின் பங்களிப்பு மிகமிக முக்கியம். அதற்கு இந்த புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அத்தனை தொகுதிகளிலும் கழக அணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு `வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு'. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். இந்த வாய்ப்புக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, கே.ஆர். பெரியகருப்பன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வி. மெய்யநாதன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கே.கே. செல்லப்பாண்டியன், முத்துராமலிங்கம், மருத்துவ அணி மாநிலச் செயலாளர் மருத்துவர்.எழிலன் நாகநாதன், அணியின் மாநிலத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் கனிமொழி என்.வி.என்.சோமு, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் முத்துராஜா, தமிழரசி, முருகேசன், மருத்துவ அணியின் மாநில துணைச் செயலாளர் மருத்துவர்.அண்ணாமலை ரகுபதி, இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளரும், தாட்கோவின் தலைவருமான இளையராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கவிச்சுடர் கவிதை பித்தன், பெரியண்ணன் அரசு, காசி முத்துமாணிக்கம், மருந்துவ அணியின் மாநில துணைத் தலைவர் மருத்துவர் எ.வ.வெ.கம்பன், மாநிலத் துணைச் செயலாளர்கள் மருத்துவர் அருண், ரமேஷ், திலகவதி ஜெயராஜ், மன்சூர் அலிகான், மருத்துவர் செண்பக விநாயகம், மாநில துணைச் செயலாளர் மருத்துவர் திலீப்குமார், கழகத்தின் இளம் பேச்சாளர்கள் சஞ்சய், பிரித்தி, மாநில துணைச் செயலாளர்கள் மருத்துவர் அஞ்சுகம் பூபதி, மருத்துவர் ஆர்.டி.அரசு, மருத்துவர் கலை கதிரவன், கோவி.லெனின், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சண்முகம், மணிராஜன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

---

## எடப்பாடி பழனிச்சாமிபோல, நாங்கள் யாரிடமும் மண்டியிட மாட்டோம்!

# பா.ஜ.க.வின் சித்து விளையாட்டால் - கழகத்தின் கடைக்கோடித் தொண்டனைக் கூட அசைத்துப் பார்க்க முடியாது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிக்கை!

*சென்னை, மே 27 -*

***"பயந்தாங்கொள்ளி பழனிசாமியும் முதுகெலும்பில்லாத அதிமுக கோழைகளும் வேண்டுமானால் பா.ஜ.க.வின் சித்து விளையாட்டிற்குப் அடிபணியலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடித் தொண்டனையோ, திராவிட மாடல் அரசையோ ஒருகாலமும் துரும்பளவு கூட யாரும் அசைத்துக்கூட பார்க்க முடியாது" என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கண்டனம் தெரிவித்துள்ளார்.***

***இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-***

*"தேவையான நிதியை மத்திய அரசு வழங்கவில்லை என்று கடந்த மூன்று ஆண்டுகளாக நிதி ஆயோக் கூட்டத்தைப் புறக்கணித்த முதலமைச்சர் ஸ்டாலின் இப்போது நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார். டாஸ்மாக் நிறுவன விசாரணைக்கு பயந்துதான் கூட்டத்தில் பங்கேற்றார்" எனக் கோவையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் சொல்லியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி.*

*'பயம்' பற்றியெல்லாம் 'கோழை' பழனிசாமி பேசலாமா? பா.ஜ.க.வோடு நேரடிக் கூட்டணி இல்லாமல் கள்ளக் கூட்டணி காலத்தில்கூட பா.ஜ.க.வுக்குப் பயந்த பயந்தாங்கொள்ளிதானே பழனிசாமி. அ.தி.மு.க.வின் தீர்மானங்களில் கூட மோடியையோ ஒன்றிய அரசையோ கண்டிக்காமல் 'வலியுறுத்துகிறோம்' என்ற வார்த்தையைப் போட்டுத் தப்பித்த சூராதி சூரர் அல்லவா பழனிசாமி.*

**பழனிச்சாமியின் பயங்கள்**

*பழனிசாமிக்கு மோடி என்றால் பயம், அமித்ஷா என்றால் பயம், அமலாக்கத் துறை பயம், சி.பி.ஐ. பயம், வருமானவரித் துறை பயம், ஆளுநர் பயம், ரெய்டு பயம், தேர்தல் ஆணையம் பயம், இரட்டை இலை சின்னம் பயம். இப்படி எல்லாவற்றுக்கும் பயந்து பா.ஜ.க.வோடு கூட்டணி சேர்ந்தவர்தான் பழனிசாமி. 'புலிக்குப் பயந்தவர்கள் எல்லாம் என் மீது படுங்கள்' என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. ஊருக்குள் புலி வந்ததும் எல்லோரும் ஓடினார்கள். அந்தப் புலியிடம் இருந்து தப்பிக்கப் பெரிய வீரனைப் போல் பேசிய ஒருவன், 'என் மீது படுத்துக் கொள்ளுங்கள், நான் காப்பாற்றுகிறேன்' என்றானாம். புலியிடம் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு அவன் போட்ட தந்திரம் அது. அந்த புலிப் பாண்டிதான் பழனிசாமி.*

*பா.ஜ.க.வுக்குப் பிடிக்காத கட்சிகளைப் பழிவாங்க விசாரணை அமைப்புகளை ஏவிக் கொண்டிருக்கிறது ஒன்றிய அரசு. மோடி ஆட்சியில் அதிகார அமைப்புகள் பா.ஜ.க.விற்கு ஆள் சேர்க்கும் அடியாட்களாக மாறிக் கொண்டிருக்கின்றன. ரெய்டு, மிரட்டல்களுக்கு உள்ளானவர்கள் பா.ஜ.க.வில் சேர்ந்ததால் 'புனிதர்கள்' ஆகிவிடுகிறார்கள். அந்த 'புனிதர்கள்' மேல் உள்ள வழக்குகள் காணாமல் போய்விடுகின்றன. அந்த பா.ஜ.க. வாசிங் மிஷினுக்குள் குதித்தவர்தான் பழனிசாமி. வழக்குகளில் சிக்கிய அ.தி.மு.க.தான் அதில் விழுந்திருக்கிறது. தி.மு.க. அல்ல.*

**பா.ஜ.க. வாசிங் மிஷின்**

*மேற்கு வங்க திரிணாமுல் காங்கிரஸின் சுவேந்து அதிகாரி, அஸ்ஸாம் காங்கிரஸின் ஹிமந்த பிஸ்வா, மகாராஷ்டிரா முன்னாள் முதல்வர் நாராயண் ராணே, சிவசேனாவைச் சேர்ந்த பாவனா கவாலி, சிவசேனா எம்.எல்.ஏ., பிரதாப் சர்நாயக் போன்றவர்கள் பா.ஜ.க. வாசிங் மிஷின் விழுந்தது போலத் தி.மு.க.வினர் விழுந்தார்களா? தி.மு.க. ஆட்சி அமைந்தது முதல் இந்த நான்கு ஆண்டுகளில் மோடி அரசின் எத்தனை எத்தனை அடக்குமுறைகள் பழிவாங்கல் நடவடிக்கைகளை தி.மு.க. எதிர்கொண்டது!. ஆனால் அத்தனை அடக்குமுறைகளையும், அமலாக்கத் துறைச் சோதனைகளையும் தீரத்தோடு எதிர்த்துநின்றது தி.மு.க.! ஆனால் ஒரு ரெய்டுக்கே பயந்து பா.ஜ.க.வோடு கூட்டணி சேர்ந்தது அ.தி.மு.க.*



*"பா.ஜ.க.வோடு வரும் சட்டமன்றத் தேர்தலிலும் கூட்டணி இல்லை" என வீராவேசமாகப் பேசிய பழனிசாமி, தன் குடும்பத்திற்குப் பாதிப்பு என்றதும் டெல்லிக்கு ஓடிச் சென்று அமித்ஷாவின் காலடியில் அ.தி.மு.க.வை அடகு வைத்தார். கடந்த ஜனவரி 12-ஆம் தேதி பழனிசாமியின் உறவினர் ராமலிங்கம் தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தப்பட்டது. சரியாக மூன்றே மாதத்தில், அதாவது ஏப்ரல் 11-ஆம் நாள் பா.ஜ.க.வுடன் மீண்டும் கூட்டணி சேர்ந்தார் பழனிசாமி.*

**கூவத்தூரில் ஊர்ந்துபோய் பதவி பிடித்த பழனிசாமி!**

*அ.தி.மு.க. போல பா.ஜ.க.வோடு தி.மு.க. சமரசம் செய்திருந்தால், எந்தச் சோதனையும் நடந்திருக்காது. சுயமரியாதை இயக்கத்தில் இருந்து வந்தவர்கள் நாங்கள். யாரிடமும் மண்டியிட மாட்டோம். கூவத்தூரில் ஊர்ந்து போய் சசிகலா காலில் விழுந்து பதவி பிடித்த பழனிசாமி, அதன் பிறகு மோடியின் கால்களைப் பிடித்துக் கொண்டார். அமலாக்கத் துறையின் அடாவடியை என்றைக்காவது பழனிசாமி எதிர்த்திருக்கிறாரா? அதன் நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருக்கிறாரா? தி.மு.க. உச்சநீதிமன்றம் வரையில் சட்டப்போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. நெருக்கடி நிலைமையை எதிர்த்து எப்படி நெஞ்சுரத்துடன் தி.மு.க. நின்றதோ, அப்படித்தான் இன்றைக்கும் 'யாருக்கும் அஞ்சோம்! எதற்கும் அஞ்சோம்! எங்கும் அஞ்சோம்! எப்போதும் அஞ்சோம்' எனப் பாரதியாரின் வார்த்தைகளைப் போல நாங்கள் பா.ஜ.க.வின் அடக்குமுறைகளை துணிந்து எதிர்த்து நிற்கிறோம். பழனிசாமியைப் போல டெல்லி எஜமானுக்குப் பயந்து, அமித்ஷா வீட்டுக்குப் போக பல கார்களில் பதுங்கிப் போன பயந்தாங்கொள்ளி பழனிச்சாமி அல்ல நாங்கள்.*

*"என்னிடம் வெள்ளைக் கொடியும் இல்லை. பழனிசாமியிடம் இருப்பது போலக் காவிக் கொடியும் இல்லை" என எங்கள் முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்ட பிறகும் அரைத்த மாவையே மீண்டும் அரைத்துக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. ஆட்சியில் இருந்த போது ஆயிரம் கோடிகளில் அடித்த கொள்ளை நிதியும் அதனைக் காப்பாற்றிக் கொள்ள அடிமைக் கால்களை மாற்றிக் கொள்ளும் காலடி சரணாகதியும் இந்துத்துவாவைத் தூக்கிப் பிடிக்கும் காவிக்கொடியும்தானே பழனிசாமிக்கு மூலதனம்!*

*முகாந்தரமற்ற கற்பனைக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அமலாக்கத் துறை பல்வேறு வழக்குகளைப் புனைந்து, எதிர்க்கட்சிகளை முடக்குவதையே தனது முழுநேரப் பணியாகக் கொண்டிருக்கிறது பா.ஜ.க., வடக்கே அமலாக்கத்துறையை வைத்து பா.ஜ.க.விற்கு ஆள் பிடித்த பார்முலாவை இங்கே செய்து பார்க்கலாம் எனக் கணக்கு போடுகிறது பா.ஜ.க. முதுகெலும்பில்லாத அ.தி.மு.க. கோழைகள் வேண்டுமானால் பா.ஜ.க.வின் சித்து விளையாட்டிற்குப் பயந்து பா.ஜ.க.வை ஆதரித்து அடிபணியலாம்; ஆனால் ஒருக் காலமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடித் தொண்டனையோ, திராவிட மாடல் அரசையோ துரும்பளவு கூட அசைத்துப் பார்க்க முடியாது என்பதை பயந்தாங்கொள்ளி பழனிச்சாமிக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*